# C.S.I TAMIL CHURCH - OMAN

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# "பாலைவன மன்னா"



... நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்...

- உபாகமம் 28 : 12

**மன்னா – 9** **மே2019** **பிரதி – 2**

## ஆயர்மடல்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அன்பர்களே, உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இறைமக்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். கடவுளின் மட்டற்ற கிருபையால் இந்த புதிய மாதத்திற்குள்ளே பிரவேசித்திருக்கிறோம். இது ஆண்டவருடைய ஆசீர்வாதம். மே மாதம் 1-ம் தேதி தொழிலாளர் தினம் என்பதால் அனைவருக்கும் தொழிலாளர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உயிர்த்தெழுந்த திருநாள்:

கடந்த மாதத்திலும் லெந்துகாலங்களை தொடர்ந்து, ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடினோம். திருச்சபையாக மகிழும்படி ஆண்டவர் அருள் கூர்ந்தார். ஆயினும் இலங்கை தேசத்தில் ஈஸ்டர் தினமான 21-4-2019 அன்று 3 தேவாலயங்களில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலில் சிறுவர்களும் பெரியவர்களுமாக 350-க்கு மேற்பட்டோர் உடல் சிதைந்து சிதறி மரித்துபொயினர். அந்த துயர சம்பவம் மிகுந்த மன வருத்தத்தை உலக அளவிலே ஏற்படுத்திவிட்டது. காயப்பட்டோரின் துரித விடுதலைக்காகவும், மரணமடைந்தவர்களின் குடும்ப ஆறுதலுக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.

### 15-வது சபைநாள்:

கடந்த 18-06-2004 அன்று பச்சிளம் குழந்தைகள் உட்பட 18 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திருச்சபை 15 ஆண்டுகளாக ஆண்டவரால் ஆச்சரியமாக வழிநடத்தப்பட்டு வருகிறது. ஆகவே ஆண்டவருக்கு நன்றி கூறும் விதமாக விடுமுறையை கருத்தில் கொண்டு 17-05-2019 அன்று சபைநாள் விழாவை ஆசரிக்க இருக்கிறோம். எனவே சங்கங்களாகவும், குடும்பங்களாகவும் ஜெபத்துடன் ஆயத்தப்பட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நமது திருச்சபையின் வளர்ச்சிக்காய் ஜெபிக்க மறவாதீர்கள்.

### பணி இடமாற்றம்:

நமது பேராயத்தின் மூலமாக 6.5.2015 அன்று முதல் உங்கள் மத்தியில் நமது திருச்சபையின் ஊழியத்தை நான்கு ஆண்டுகள் முழுமையாக நிறைவேற்ற கிருபை செய்த ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறேன். குடும்ப அந்தஸ்து இல்லாத விசாவில் பணிசெய்ய வேண்டியதிருந்ததால் தனிமையாக இறைமக்கள் ஆதரவுடன் இறைப்பணியை செய்ய நேர்ந்தது. சபைக்குழுவினராக, இல்லச்சந்திப்புக்கு அழைத்துச் செல்லும் அன்பர்களாக, சங்க பொறுப்பாளர்களாக, இறைமக்களாக பல்வேறு நிலைகளில் ஊழியத்தை தாங்கினவர்கள், ஒத்துழைத்தவர்கள், அன்பு காட்டினவர்கள், ஜெபத்தினால் ஆதரித்தவர்கள் ஆக அத்தனைபேருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதம் 28-ம் தேதியுடன் இத்திருச்சபையின் பணியினை நிறைவு செய்கிறேன். ஜீன் மாதம் 1-ம் தேதியிலிருந்து புதிய திருச்சபையில் இறைப் பணிசெய்ய இருக்கிறேன். ஜெபித்துக்கொள்ளுங்கள்.

### புதிய போதகர்:

புதிதாக பொறுப்பேற்க இருக்கும் போதகர் அவர்களுக்கு விசா விரைவில் கிடைக்கவும் அவர்களது திருப்பணி இத்திருச்சபைக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் கருத்தாய் ஜெபியுங்கள்.


கர்த்தர் தாமே இத் திருச்சபையையும் இறைமக்களாகிய உங்களையும், உங்கள் குடும்பங்களையும், வாழ்வையும் நிறைவாக ஆசீர்வதித்து கிருபையாய் நடத்துவாராக. ஆமென்.

**அன்புடன் போதகர்.**
**Rev. K. கிளாட்ஸ்டன்**

## பிரியாவிடை அளிக்கிறோம்!

## 'Bid Adieu'

"கர்த்தாவே உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக". – சங்கீதம் 90:16



நமது சபையின் போதகர் அருள்திரு. K. கிளாட்ஸ்டன் அவர்கள் 06-05-2015 அன்று இந்த தேசத்திற்க்கு வந்து 4 ஆண்டு காலம் நம் மத்தியில் சிறப்பாக ஊழியம் செய்து நம் சபையின் எல்லா காரியங்களிலும் அதிக ஊக்கம் கொடுத்து மிகுந்த ஈடுபாடோடு செயல்பட்டு சபையை வளர்ச்சி பாதையில் நடத்தினார்கள். அவருடைய பணிக்காலத்தில் பல புதுமைகளை சபை ஆராதனையிலும் கிளை சங்கங்களிலும் புகுத்தி பொலிவூட்டினார்கள். 2017 ஏப்ரல் மாதம் சபையின் இன்னும் ஒரு மைல்கல்லாக அருணோதய ஆராதனையும் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடந்து கொண்டு இருக்கிறது. வேதம் வாசிப்பதின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வண்ணம் அனுதின வேத வாசிப்பு திட்டத்தை பாலைவன மன்னாவில் இணைத்து பலர் பயனடைய செய்தார்கள். சிறுவர் ஊழியத்தில் தான் கொண்ட அக்கரையின் மூலம் சிறுவர் தியான முகாமை அறிமுக படுத்தி செயல்படுத்தினார்கள்.

சபை ஆராதனைகளில் ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் பலப்படும் படி மிக சிறப்பான ஆழமுள்ள கருத்தான செய்தி வழங்குவதில் வல்லவர். பாடல்கள் பாடுவதிலும், இயற்றுவதிலும் தனி திறமைப்படைத்தவர்கள். நம் ஆராதனையில் நாம் பயன்படுத்தும் பிறந்த நாள் வாழ்த்து பாடல்களே அதற்கு சான்று. குடும்ப அந்தஸ்து இல்லாத விசாவில் இருந்த போதும் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் சபையின் எல்லா காரியங்களையும் மிக நேர்த்தியாகவும் நேர்மையாகவும் நடத்தினார்கள்.

29-05-2019 அன்று நம் சபையின் பணிகளை நிறைவு செய்து தாயகம் திரும்ப இருக்கிறார்கள். அன்னாருடைய ஊழியம் மேலும் சிறக்க நம்முடைய இறைவன் துணை நிற்கவும், போதகரும் அவர் துணைவி மற்றும் பிள்ளைகளும் எல்லா ஆசீர்வாதம் பெற்று நிறைவோடு வாழ நம் சபை குழுவின் சார்பாகவும் மற்றும் சபையின் சார்பாகவும் பிரியாவிடை அளிக்கிறோம். "கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார் வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்(சங்கீதம் 115:14,15) என்ற வசனத்தின் படி இறைவன் தாமே அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து காத்து வழி நடத்துவாராக.

**"Wishing you much Joy & Happiness as you begin a new chapter in your life"**

**சபை செயலர்,**
**சுஜித் கிளாட்சன்.**

## அருளுரை

## உழைப்பில் ஆசீர்வாதம்

... நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் ... உபாகமம் 28 : 12

**அன்பானவர்களே,**

உழைப்பு ஆண்டவர் மனிதனுக்கு கொடுத்த கட்டளை என்றே சொல்லலாம். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் - என ஆதியாகமம் 2:15 கூறுகிறது. கடவுளால் படைக்கப்பட்ட உலகத்தைப் பண்படுத்துவதும் காப்பதும் மனிதருக்கு கடவுள் கொடுத்த கட்டளையாகவே இருக்கிறது. உலகம் பண்படுத்தப் படவேண்டுமென்றால் அதற்கு உழைப்பு தேவைப்படுகிறது. உழைப்பை கனப்படுத்தும் கர்த்தர் உழைப்பின் பலனாகிய ஆசீர்வாதத்தை தருகிறார். அதை நாம் நமக்கும் பயன்படுத்தி மகிழ்கிறோம். எளியவர்களுக்கு கொடுத்தும் மகிழலாம்.

மனித வாழ்க்கையில் பொருளாதார ஆசீர்வாதம் மிக மிக அவசியமானது. அதை நமக்கு தருகிறவர் நமது ஆண்டவர் தான் நமது ஆசீர்வாதங்களை பறிக்கவும், கெடுக்கவும், அழிக்கவும் தீயோன் நினைக்கிறான். எனவே நமது "உழைப்பில் ஆசீர்வாதம்" பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த தியானத்தின் மூலம் தியானிப்போம். திருமறையில் சொல்லப்பட்ட யோசேப்பின் வாழ்விலிருந்து உழைப்பில் ஆசீர்வாதம் பற்றி சிந்திப்போம்.

### யோசேப்பின் உழைப்பில் ஆசீர்வாதம்:-

அடிமையாக எகிப்துக்கு கொண்டு போகப்பட்டு போத்திப்பாரால் விலைக்கு வாங்கப்பட்டவன்தான் யோசேப்பு. அடிமைக்கு என எந்த மதிப்பும் மரியாதையும் இல்லாத சமூக நிலையே அன்று இருந்தது. ஆனால் அந்த அடிமையோடு தேவன் இருந்தார் என ஆதி. 39:2 கூறுகிறது. அவன் காரிய சித்தி உள்ளவனானான். அவன் செய்த எல்லாவற்றையும் தேவன் வாய்க்கப்பண்ணினார். அதனை கவனித்த பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் அடிமையாகிய யோசேப்பை தன் வீட்டின் ஊழியக்காரனாகவும், வீட்டு விசாரணைக்காரனுமாக்கி தனக்கு உண்டான எல்லாவற்றையும் யோசேப்பின் கையில் ஒப்புக்கொடுத்தான். யோசேப்பு போத்திப்பாரின் வீட்டில் விசாரணைக்காரனாக ஆக்கப்பட்ட நாளிலிருந்து யோசேப்பினிமித்தம் கர்த்தர் போத்திபாரின் வீட்டை ஆசீர்வதித்தார். வீட்டிலும் வெளியிலும் எங்கும் எல்லாவற்றிலும் கர்த்தரின் ஆசீர்வாதம் போத்திபாருக்கு யோசேப்பினிமித்தம் கிடைத்தது. போத்திபார் புசிக்கிற போஜனத்தை தவிர வேறு எதையும் யோசேப்பிடம் விசாரிக்கவில்லை. அந்த அளவுக்கு நம்பிக்கையும், நன்மதிப்பும் யோசேப்பு பெற்றிருந்தான். அதற்கு யோசேப்பின் பணியில் போத்திபாரின் இல்லம் பெற்ற ஆசீர்வாதங்களே காரணமாயிருந்தது. நற்பணி நிறைவேற்றிய யோசேப்புக்கும் சோதனைவந்தது. சிறையிலும் அடைக்கப்பட்டான். ஆனால் அது நிரந்தரமானதாக இல்லை. காண்கிற தேவன் யோசேப்பின் உண்மையையும், அனுபவிக்கும் சிறுமையையும் கண்டார். சிறைச்சாலை தலைவனுடைய கண்களில் தயவு கிடைக்க செய்தார். அவன் சிறை வைக்கப்பட்ட அனைவரையும் யோசேப்பின் வசம் விட்டுவிட்டான். சொப்பனங்களின் அர்த்தத்தை சொல்லும் ஆற்றலை யோசேப்புக்கு தேவன் கொடுத்திருந்தார். அதினிமித்தம் பார்வோன் கண்ட சொப்பனத்துக்கு விளக்கம் கொடுத்தான்யோசேப்பு. பார்வோன் யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான்.

**யோசேப்பின் உயர்வுக்கு காரணம் என்ன?**

## 1. கபடம் இல்லாத குணம்:-

முதிர்வயதில் யாக்கோபுக்கு யோசேப்பு பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை யாக்கோபு அதிகமாக நேசித்தார். தந்தையின் பாசம் அதிகமாய் கிடைத்ததால் சகோதரர்கள் யோசேப்பை அதிகமாய் பகைத்தார்கள். பட்சமாய் பேசுவதுமில்லை. ஆனால் தான் கண்ட அரிக்கட்டு சொப்பனத்தை (ஆதி 37:6-8) தன் சகோதரரிடம் சொன்னான் சகோதரர்களோ அந்த சொப்பனத்தினிமித்தம் இன்னும் அதிகமாய் பகைத்தார்கள். அதன் பின்னும் யோசேப்பு தான் கண்ட சூரிய, சந்திர,நட்சத்திர சொப்பனத்தை (ஆதி 37:9) தன் சகோதரரிடம் சொன்னான். ஏற்கனவே சொப்பனத்தைச் சொன்னதினால் தன் சகோதரர்கள் அதிகமாய் பகைக்கிறார்களே என்பதை அறிந்திருந்தாலும் கபடமற்ற மனதோடு மீண்டும் சொப்பனத்தைச் சொன்னான் அவனது சகோதரர்கள் பொறாமைக் கொண்டார்கள் என ஆதி 37:11 கூறுகிறது. பகை, அதிக பகையாய் மாறி, பொறாமையாய் உருவெடுத்தது. ஆனாலும் யோசேப்பின் பண்பில் கபடமில்லை.

## 2. தந்தையின் வார்த்தைக்கு கீழ்படிந்தான்:-

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மேல் அதிக பகையோடு பொறாமையாய் இருக்கிறார்கள் என யாக்கோபும் அறிந்திருந்தார். யோசேப்புக்கும் அது தெரியும். மேய்ப்பர்களாக சீகேமிற்கு ஆடுகளை மேய்க்கச் சென்ற அவர்களையும், ஆடுகளையும் விசாரிக்க நான் உன்னை சீகேமுக்கு அனுப்ப போகிறேன் என்றார் யாக்கோபு. அந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் யோசேப்பு 'போகிறேன்' என்று மறுமொழி கூறினான். எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. சகோதரர்கள் தன்னை பகைத்து பொறாமை கொள்கிறார்களே அவர்களிடம் நான் போகமாட்டேன் என்று கூறவே இல்லை. சீகேமுக்கு சென்ற போது அங்கே சகோதரர்களை காணவில்லை. அதனால் திரும்பிவரவும் இல்லை. தந்தை யாக்கோபு சொன்னவார்த்தைக்கு கீழ்படிய வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. சகோதரர்கள் தோத்தானில் இருக்கிறார்கள் என்பதை கேள்விபட்டபோது அங்கே சென்றான்.

## 3. கர்த்தர் யோசேப்போடே இருந்தார்:-

சகோதரர்கள் யோசேப்பின் அங்கியை கிழித்து ஆட்டின் ரத்தத்தில் தோய்த்து ஏதோ துஷ்டமிருகம் யோசேப்பை பீறிப்போட்டது என்றுயாக்கோபிடம் கூறினார்கள். ஆனால் இஸ்மவேலரிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுவிட்டார்கள். தந்தை, சகோதரர்கள் என்கிற உறவிலிருந்து கர்த்தர் துணை என்கிறபடி தேவன் யோசேப்போடே இருந்தார். இஸ்மவேலர்கள் எகிப்திய பிரதானியாகிய போத்திபாரிடம் யோசேப்பை விற்று விட்டனர். இது யோசேப்போடு இருந்த தேவனின் திட்டம் என்றுதான் சொல்லவேண்டும். உறுவுகள், உடன்பிறப்புகள் வெறுத்து தள்ளினாலும் விலகிச் செல்லாத நேசர் நமது ஆண்டவர். அவர் யோசேப்புடன் இருந்து போத்திபாரின் இல்லத்தில் எதைச் செய்தாலும் வாய்க்கச் செய்து ஆசீர்வதித்தார். தேவனாகிய கர்த்தர் யாரோடு இருக்கிறாரோ அவர்களுக்கு எப்படிப்பட்ட கடினமான சூழ்நிலைகள் இருந்தாலும் அதனையும் ஆசீர்வாதமாக அவர் மாற்றிவிடுவார். கடைசிவரை அப்படியே செய்தார்.

## 4. எஜமானுக்கு உண்மையாக இருந்தான்:-

உலக எஜமானாகிய போத்திபார் தான் உண்ணும் உணவைத்தவிர எதையும் யோசேப்பிடம் விசாரித்ததில்லை பரலோகத்தின் தேவன் பரம எஜமானாக இருந்து காரியங்களை வாய்க்க செய்து யோசேப்பினிமித்தம் போத்திபாரின் இல்லத்தை

ஆசீர்வதித்தார். யோசேப்பின் அழகும் சௌந்தர்யமும் போத்திபாரின் மனைவியின் உள்ளத்தில் இச்சையை தூண்டியது தவறு செய்ய யோசேப்பை அழைத்தாள். யோசேப்போ தன் எஜமானாகிய போத்திபாருக்கும், தன் ஆத்துமத்தின் எஜமானாகிய தேவனுக்கும் உண்மையாயிருக்க விரும்பினான். இச்சைக்கு தன்னை ஒப்புக்கொடுக்காமல் தீவிரமாய் ஓடித் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்காக அவனது அங்கியையும் விட்டுவிட்டு ஓடினான். பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டாலும் உலக, பரம எஜமானர்களுக்கு உண்மையாயிருந்தான்.

**5. உயர்வில் பணிவாய் செயல்பட்டான்:-**

பொய்குற்றச்சாட்டுக்கு யோசேப்பிற்கு சிறைவாசமே பரிசாய் கிடைத்தது. சொப்பனங்களை விடுவிக்கும் தேவ ஆவியின் ஞானத்தை அவனுக்குள் தேவன் வைத்திருந்தார். பார்வோனின் சொப்பனத்தை வெளிப்படுத்தினதினால் தேவ ஆவியைப்பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ? என பார்வோன் புகழ்ந்து. எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரி ஆக்கினான். எவ்வளவு பெரிய உயர்வு இது! தேவனால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் எதுவுமில்லை. அடிமையான யோசேப்பு தேசத்தின் அதிகாரி ஆனான். உயர்வு வரும்போது அதைவைத்து பழிவாங்க நினைப்போர் வாழும் உலகம் இது. ஆனால் யோசேப்போ உயர்வு பெற்றபோது பணிவாய் நடந்து கொண்டான். பஞ்சம் பிழைக்க எகிப்துக்கு வந்த தன் சகோதரர்களை பழிவாங்க துடிக்கவில்லை. பட்சமாய் பேசி அவர்கள் தவறுகளை எல்லாம் மன்னித்து ஜீவரட்சணை செய்யும்படி தேவன் என்னை இங்கு அனுப்பினார் என்று தன் உயர்வை தேவனின் கரத்திலிருந்து பெற்றுக் கொண்டது என அறிக்கையிட்டான். தன் சகோதரர்களையும் பெற்றோரையும் கோசேன் நாட்டில் குடியமர்த்தி அவர்களைப் பராமரித்தான்.

அன்பர்களே, யோசேப்பின் உழைப்பில் ஆசீர்வாதம் ஏராளமானதாகும், அவன் எங்கெல்லாம் சென்றானோ அங்கெல்லாம் ஆசீர்வாதம். போத்திபாரின் இல்லத்தில் ஆசீர்வாதம், சிறைச்சாலையில் ஆசீர்வாதம், எகிப்துதேசத்தில் கொடிய பஞ்சத்தில் ஜனங்களை காக்கிற ஆசீர்வாதம், பஞ்சம் பிழைக்க வந்த தன் சொந்த சகோதரர்கள், தந்தை எல்லாருக்கும் ஆசீர்வாதம். இதை வாசிக்கும் அன்பரே, நாம் நம் குடும்பத்திற்கும், நம் பணி செய்யும் இடங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கிறோமா? நற்பண்பும், இறைபக்தியும், ஆசீர்வாதத்தின் மேல் ஆசீர்வாதத்தை நமக்கு கொண்டுவரும் நம் குறைவுகள் என்ன என ஆராய்வோம் என்னையும் என் உழைப்பையும் ஆசீர்வதியும் என்று கெஞ்சுவோம் தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக ஆமென்.

**அன்புடன் போதகர்,**

**Rev. K. கிளாட்ஸ்டன்**

## சிறுவர் பகுதி

ஒரு சிற்றூரில் முதிர் வயதான தந்தை ஒருவர் இருந்தார். அவர் ஒரு சிற்பி. அவருக்கு இரண்டு ஆண் மக்கள். ஒரு நாள் தன் இரண்டு மகன்களையும் அழைத்து. எனக்கு வயதாகிவிட்டது. கண் பார்வையும் மங்கிவிட்டது. நான் உங்களுக்கு சொத்து எதுவும் சேர்த்து வைக்கவில்லை. நான் பயன்படுத்திய சிற்பம் செதுக்கும் கருவிகளை உங்களுக்கு பங்கிட்டு தருகிறேன் என்று சொல்லி இருவருக்கும் சரிசமமாக பங்கிட்டுக் கொடுத்தார். இரண்டுபேரும் சிற்பம் வடிக்க பயன்படும் நல்ல தரமான கருவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

மூத்தமகன் இந்த உளிகளையும், சுத்திகளையும் வைத்து என்னச் செய்வது? பெரிய கம்பெனி ஏதாவது ஒன்றில் வேலைக்கு சேர்ந்து நன்றாக சம்பாதிக்கலாம் என நினைத்து, தந்தை தந்த கருவிகளை தன் வீட்டில் ஒரு புறத்தில் ஒதுக்கி போட்டுவிட்டு வேலை தேடி

பல இடங்களுக்கு அலைந்து திரிந்தான். போகுமிடமெல்லாம் ஏதாவது ஒரு வேலைகிடைக்கும் அந்த வேலையை செய்வான். அதில் கிடைப்பதைக் கொண்டு உணவு விடுதிகளில் நன்றாக சாப்பிடுவான். எங்கேயாவது தங்கிக்கொள்வான். எந்த வேலையிலும் நிரந்தரமாக நிற்க மாட்டான். சுற்றி சுற்றியே தன் காலத்தை செலவிட்டான். அவனது குடும்பம் வறுமையில் வாடியது. பிள்ளைகள் வாடிய தேகத்துடன் வாழ்ந்தனர்.

ஆனால் இளைய மகனோ தன் தந்தை தனக்கு தந்த கருவிகளைப் பயன்படுத்தி தனது சிற்ப திறமையை பயன்படுத்தி சின்ன சின்ன சிற்பங்களை அழகாக செய்து விற்று வந்தான். அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை சீராக நடத்தி வந்தான். குடும்பத்தினர் முகத்திலும் முகமலர்ச்சி இருந்தது. பட்டினியில்லாமல் அந்தந்த நாளுக்குரிய வாழ்வு கடந்து போனது.

ஒரு முறை ஒரு சிற்பபோட்டி ஒன்று நடந்தது. விலைமிக்க பரிசுகளும் அறிவிக்கப் பட்டிருந்தது. அதை அறிந்த இவன் தனது முழு திறமையையும் உள்ளடக்கி சிற்பம் ஒன்றை செய்ய நினைத்தான். ஆண்டவரை நோக்கி ஜெபித்தான். ஆண்டவரே எளியவர்களை புழுதியிலிருந்து தூக்கிவிடுகிற தேவனே நான் செய்கிற தொழிலை ஆசீர்வதித்து இந்த சிற்பக்கலைப் போட்டியில் நல்ல சிறந்த பரிசைப்பெற எனக்கு உதவி செய்யும் என்று மன்றாடினான். குடும்பமாகவும் ஜெபித்தனர். குறிக்கப்பட்ட நாளொன்றில் அவன் சிரமத்துடனும் ஜெபத்துடனும் செய்த சிற்பத்தை போட்டி தலத்திற்கு எடுத்துச் சென்றான். என்ன ஆச்சரியம். இவன் வடித்த அழகான சிற்பத்திற்கு முதல் பரிசு கிடைத்தது. நினைத்துக் கூட பார்க்காத அவனது மனது பிரமிப்பில் ஆழ்ந்தது. அந்த சிற்பப் போட்டிக்கு பரிசு வழங்க வந்த சிறப்பு விருந்தினர் ஒரு அரசாங்க சிற்பக்கலைத் துறையின் தலைவராக இருந்தார். அந்த அதிகாரியின் கரங்களில் விலையுயர்ந்த முதல் பரிசைப் பெற்று மகிழ்ந்தான். நிகழ்ச்சி முடிந்தபின் தன்னை வந்து பார்த்து செல்லவேண்டும் என அந்த அதிகாரி இவரிடம் கூறினார். அதன்படி அந்த இளைய சகோதரர் அந்த அரசாங்க அதிகாரியை சந்தித்தார். அவர் நான் உனக்கு அரசாங்க வேலை தருகிறேன். நீ தொடர்ந்து பிரயாசப்படு என்று வாழ்த்துக் கூறி இவனது முகவரியையும் வாங்கிச் சென்றார்.

மறுவாரத்தில் தன் வீட்டின் முன் அஞ்சல்காரர் ஒருவர் வருவதை இளைய சகோதரர் பார்த்து அவரிடம் சென்று தபாலில் வந்த கடிதத்தை வாங்கி திறந்து வாசிக்கலானார். அதில் அரசு சிற்பக்கலைக் கூடத்தில் அரசுப் பணி செய்யும் ஆணை வழங்கப்பட்டிருந்தது! அரசுப் பணியாளராக நல்ல ஊதியத்துடன் தன் குடும்பத்தை சந்தோஷமாய் நடத்தி வந்தார்.

ஆனால் அவரது அண்ணன் குடும்பமோ வறுமையில் வாடியது. இதனைக் கண்ட இளைய சகோதரர் தன் அண்ணனின் குடும்பத்திற்கு ஏதாவது வகையில் உதவி செய்திட வேண்டும் என நினைத்து உதவினான். நன்மை செய்ய உனக்கு திராணி இருக்கும் போது அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே என்ற வசனத்தின்படி தனக்கு கர்த்தர் தந்த திறனைப் பயன்படுத்திக் கொண்டான் ஆண்டவருக்கும் நன்றி கூறி ஆசீர்வாதமாக வாழ்ந்தான். அவனது தந்தையும் அவனை மெச்சிக் கொண்டு ஆண்டவருக்கு நன்றி கூறி மகிழ்ந்தார்.

**சிந்தனை வசனம்:**"தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனைக் நீ கண்டால் அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்."- நீதி 22:29

**அன்புடன் போதகர்,**
**Rev. K. கிளாட்ஸ்டன்**

## மகளிர் தியான பகுதி

### உறுதியுடன் உழைத்த எஸ்தர்

"எஸ்தர் ராஜாத்தியே, உன் வேண்டுதல் என்ன? அது உனக்கு கொடுக்கப்படும்".
– எஸ்தர் 7:2

ஆகாஸ்வேரு அரசனின் மனைவி வஸ்தி, ராணி பட்டத்தை இழந்தபின்பு. அந்த இடத்தில் எஸ்தர் ராணியாக்கப்பட்டாள். இவள் ஒரு யூதப் பெண்மணி தாயும் தந்தையும் இல்லாத அனாதைப் பெண்மணி. தாயும் தந்தையும் இல்லாததால் இவளது சித்தப்பா மொர்தெகாய் என்பவரால் இவள் வளர்கக்கப்பட்டாள். மொர்தெகாய் ஆகாஸ்வேருவின் அரண்மனையில் பணிபுரிந்தவர். அவரது ஆலோசனைப்படி உண்மையாயும், உறுதியாயும் செய்து நிறைவேற்றி உயர்ந்த ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்தாள். எஸ்தர் என்றால் 'நட்சத்திரம்' என்பதே பொருள் எஸ்தரைப் பற்றி சிலகாரியங்களை நாம் பார்ப்போம்.

### 1. எஸ்தர்ரின் ராணியாக்கப்படுதல்:

ஆகாஸ்வேரு அரசன் தன் பிரதானிகளுக்கு வைத்த பெரிய விருந்தில் போதையின் பெருக்கில் தன் மனைவி வஸ்தியை எல்லா பிரதானிகளுக்கு முன்பாகவும் வருமாறு அழைத்தான். ஆனால் அது நல்லதல்ல என்பதை உணர்ந்த வஸ்தி அரசரின் அழைப்பை புறக்கணித்தாள். எனவே அவள் ராணி பட்டத்தை இழந்து போகிறாள். அந்த இடத்துக்கு அகாஸ்வேருவுக்கு புதிய மனையாட்டியைத் தேடினர். மொர்தெகாய் நினைத்தபடி ராஜாவுக்கு முன்பாக எஸ்தர் கொண்டுவரப்பட்டபோது அவள் ராஜாவின் கண்களில் தயவு பெற்றாள். அவள் ராஜாவின் மனைவியாக்கப்பட்டு ராணிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டாள். ஏராளமான கன்னிப்பெண்கள் அங்கு அழைக்கப்பட்டிருந்தாலும் எஸ்தரின் சௌந்தரியமான அழகு ராஜாவுக்கு அவள்மேல் பிரியத்தை ஏற்படுத்திற்று, வெளிப்புறமாக பார்க்கும்போது அவளது சரீர அழகே ராஜாவுக்கும், பிரதானிகளுக்கும் தெரிந்திருக்கும். ஆனால் அவளது பக்திவாழ்வு, அவளது அகத்தின் அழகாக இருந்ததை கர்த்தர் மாத்திரமே அறிந்திருந்தார். அதற்குரிய பரிசாக கர்த்தர் இந்த உயர்ந்த நிலையை கொடுத்தார் என்று சொல்லலாம்.

இன்றைக்கும் அழகு நிறைந்தவர்கள் உண்டு முக அழகும் முக மலர்ச்சியும் பிறர் விரும்புகிறதற்கேதுவானதாக இருக்கலாம். நம்மால் நம்முடைய சாயலை அழகுபடுத்திட இயலாது. கடவுளுடைய திட்டப்படியே அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம். அழகால் அழிவைத் தேடிக் கொள்ளாதபடி ஆண்டவர் தரும் உயர்வுக்காய் தாழ்மையுடனும், பொறுமையுடனும் காத்திருப்பது அவசியம்.

### 2. எஸ்தரின் உழைப்பு:

ஆகாஸ்வேரு அரண்மனையில் ஆமான் என்பவனுக்கு யூதனாகிய மொர்தெகாயை கொஞ்சமும் பிடிக்காது. அதனால் யூத ஜனங்களையே அழித்துவிட திட்டமிட்டான். அதை அறிந்த மொர்தெகாய் ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிட்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய் என்ற சங் 50:15-ன் படி எஸ்தர் தேவனைத்தேட திட்டமிட்டாள். யூத ஜனங்களுக்கு உபவாசம் அறிவிக்கப்பட்டது. எஸ்தரும் அவளுடைய தாதிமாரும் உபவாசத்தோடு ஜெபித்தார்கள். அதன்பின் ராஜாவின் உத்தரவைப் பெறுகிறதற்காக பிரயாசப்பட்டாள். ராஜாவின் முன்பாக வரும்போது ராஜாவின் பொற் செங்கோல் நீட்டப்படாவிட்டால் வாழ்வு முடிந்து போகும் என்பதை அறிந்த எஸ்தர் தன் ஜனத்துக்காக ஜீவனே போனாலும் துணிந்து ராஜ சமுகத்தில் பிரவேசிப்பேன் என தீர்மானித்தாள். எஸ்தர் 10:16-ன் படி நான் செத்தாலும் சாகிறேன், ராஜாவின் செங்கோல் நீட்டப்படாவிட்டாலும் அவருடைய சமுத்தில் பிரவேசிப்பேன் என்று உறுதிக் கொண்டாள். அங்கு அவளுடைய ஜீவன் அவளுக்குப்

பெரியதாகத் தெரியவில்லை. தன்னுடைய யூத ஜனங்களின் வாழ்வே பெரியதாகத் தெரிந்தது. துணிந்து செயல்பட்டாள்.

**3.எஸ்தரின் ஆலோசகர்:**

ஒவ்வொரு நற்பணிக்கும் பின்னால் யாரோ ஒருவருடைய அல்லது சிலரது நல் ஆலோசனைகள் இருக்கும். தன் ஜனங்களுக்கு தீமை வந்துவிட்டதை உணர்ந்த எஸ்தரின் சித்தப்பா மொர்தெகாய் தான் எஸ்தருக்கு நல்ல ஆலோசகராக இருந்தார். ஆபத்து நெருங்கியிருக்கிறது. அந்த வேளையில் எஸ்தர் எப்படிச் செயல்படவேண்டும் என்பதை மொர்தெகாய் உணர்ச்சிப் பூர்வமாக சொல்லிக் கொடுத்தார். நீ இந்த காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள் நீ இப்படிப்பட்டக் காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மைக் கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் - என்று சொல்லும் தகவலை எஸ்தருக்கு அனுப்பினான். நல் ஆலோசனை இது. யூத ஜனங்களுக்கு மட்டும்மல்ல. ராஜாத்தியாகிய எஸ்தருக்கும் தான் இந்த செய்தி அவசியமானதாக இருந்தது. மொர்தெகாயின் ஆலோசனைப்படி செயல்பட துணிந்த எஸ்தர் ராஜா சமூகத்தில் பிரவேசித்தாள். எஸ்தர் ராஜாத்தியே உன் வேண்டுதல் என்ன? எனக்கேட்டு ஆகாஸ்வேரு எஸ்தரின் விருப்பத்தை நிறைவேற்றினான்.

அன்பர்களே எஸ்தரின் வாழ்வின் அனுபவத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய உண்மைகள் என்ன? கர்த்தர் யாரையும் எந்த சூழ்நிலையிலிருந்தும் எப்பொழுதும் உயர்த்தலாம். தேவனால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் என ஒன்றுமில்லை. எளியவனை புழுதியிலிருந்து தூக்கிவிடுகிற தேவன் அவர். எஸ்தரை உயர்த்திய தேவன் அவரை நம்பும் எவரையும் மேன்மைபடுத்துவது அவருக்கு இலேசான காரியமாகும். ஆனால் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தனக்கு ராஜமேன்மை கிடைத்து விட்டதே என அவள் சும்மா இருக்கவில்லை. தங்களுக்கு மேன்மை கிடைத்தால் அதைப்பிறருக்கு நன்மை செய்கிறதற்கு ஏதுவாக பயன்படுத்தவேண்டும். அதனை எஸ்தர் செய்து நிறைவேற்றி யூத ஜனங்களை விடுவித்தாள் ஒவ்வொரு பணிக்கும் நல்ல ஆலோசகர்களை நாம் கொண்டிருக்கவேண்டும். மனிதர்களைக் காட்டிலும் கர்த்தர் நமக்கு தரும் நினைப்பூட்டுதல் பிரயோஜன முள்ளதாக இருக்கும். எனவே கர்த்தரின் நாமத்திலே உண்மையாய்ச் சொல்லப்படுகிற நல்ல ஆலோசனைகளை நாம் கேட்க தயாராக இருக்கவேண்டும். அதற்கு நமது தேவனையே நாம் சார்ந்து கொள்ளவேண்டும்.

எஸ்தரைப்போல் அழைப்பில் உண்மையாயிருந்து ஜெபத்துடனும், உறுதியான செயல்களோடும் நம் வாழ்வை நாம் தொடர்ந்தால் நமக்கு மட்டுமல்ல நம்மைச் சார்ந்திருப்போருக்கும். நாம் ஆசீர்வாத காரணிகளாக அமைய முடியும். ஆண்டவர்தாமே அப்படிப்பட்ட ஆசீர்வாதமான வாழ்வை உங்கள் ஒவ்வொருவருக்கும் தந்தருள்வாராக. ஆமென்.

**அன்புடன் போதகர்,**

**Rev. K. கிளாட்ஸ்டன்**

**வாழ்த்துகிறோம்**

கர்த்தருடைய கிருபையால் ஏப்ரல் மாதம் 26-ம் தேதி பரிசுத்த மெய்
விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. M. Robinson & Mrs. R. Anushia**

இல்லற வாழ்வில் எல்லா நலமும் பெற்று கர்ததருக்குள் நீடூழி வாழ
திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# ஆன்ட்ரு ஃபுல்லர்

## பெலன் உள்ளமட்டும்...

**மண்ணில்** : **05.02.1754**
**விண்ணில்** : **1815**
**ஊர்** : **கேம்பிரிட்ஜ் ஷயர்**
**நாடு** : **இங்கிலாந்து**
**தரிசன பூமி** : **இங்கிலாந்து**

கதிரவன் தன்கண்களை அகலத் திறந்து கொண்டிருந்த அந்த இனிய வேளையில், இறை மனிதர்கள் 12 பேர் இணைந்து கூடி ஜெபித்துக் கொண்டிருந்தனர். ஆண்டவர் அவர்கள் உள்ளத்தில், ஓர் அழகான, தரிசனம் நிறைந்த திட்டமொன்றைக் கொடுத்தார். ஏகமனதாக அவர்கள் அதை ஒப்புக்கொள்ள, 1792ஆம் ஆண்டு பாப்டிஸ்ட் சொசைட்டி உருவானது.

இதனை உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்தவரே ஆண்ட்ரு ஃபுல்லர். 22 வருடங்கள் பாப்டிஸ்ட் மிஷனெரி சங்கத்தின் இயக்குனராக செயல்பட்டு அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு, அதனை வளரச் செய்தார்.

இவர் இறையியல் பட்டம் பெற்றவரல்ல, ஆனால் இறையியலாளர்களால் முக்கியத்துவம் பெறப்பட்டு பாராட்டப்பட்டவர். இவர் எழுதிய "அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நற்செய்தி" என்ற புத்தகம் மிஷனெரி பணிகளுக்கு மிகுந்த உற்சாகத்தையும், சவாலையும், ஆர்வத்தையும் ஏற்படச் செய்வதாக அமைந்தது. வில்லியம் கேரிக்கு இது பெரிதும் துணையாக அமைந்தது.

16 வயதில் பாப்டிஸ்ட் சபையில் இணைந்த இவர் 21 வயதில் ஆயராக்கப்பட்டு. தன் வாழ்நாள் முழுவதும் போதகப் பணியை மிகுந்த கவனத்துடனும், தரிசனத்துடனும் நிறைவேற்றி முடித்தார்.

உலகின் பல பாகங்களுக்கும் மிஷனெரிகளை அனுப்ப வேண்டும் என்ற தரிசனம் உடையவர் இவர். எனவே, இவர் தன் பேச்சாலும், எழுத்தாலும் மிஷனெரி தாகத்தை மக்களிடம் சுடர்விடச் செய்தார். இதனால் பல மிஷனெரிகள் எழும்பி தேசத்தை அசைத்தனர்.

"பாப்டிஸ்ட் மிஷனெரி சங்கத்தின் தந்தை" என்று அழைக்கப்பட்ட இவர், துல்லியமான முடிவுகள் எடுப்பதில் சிறந்தவர். ஆழமாக யோசித்து, நிதானமாகப் பேசுவதில் நிபுணர். இளம் வயதில் குத்துச்சண்டை வீரராக களமிறங்கிய இவர் பின்னர் தன் உடல் பலமனைத்தையும் ஆண்டவர் பணிக்கு அர்ப்பணித்துத் தன் வாழ்நாள் முழுவதும், சிறந்த தொண்டாற்றினார்.

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : ஆண்டவர் தரும் பெலத்தை ஒருவராலும் எடுக்கவோ, கொடுக்கவோ முடியாது. – வேதாகம நண்பன்

**குயவனின் கரங்களில்** :ஆண்டவரே! என் பெலனனைத்தையும் உந்தன் பணிக்கு அர்ப்பணித்து, செயல்பட என்னைத் தருகிறேன்.

(நன்றி: 365 மிஷனெரிகளின் வரலாறு)

# எஜமானின் கரங்களை நோக்கும் கண்கள்

உழைக்கும் படி இந்த தேசத்திற்கு வந்திருக்கிற வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் உழைப்பாளர் தின நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்ளுகிறேன்.

“இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும் வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.”—சங்கீதம் 123:2

யார் இந்த வேலைக்காரர்கள், நாமே அவர்கள், நாம் தான் நம்முடைய வாழ்வில் காத்திருக்கும் அனுபவம் பெற்றவர்கள். ஊதிய உயர்வுக்காக, பதவி உயர்வுக்காக, பல சலுகைகளுக்காக…

இப்படி பல சமயங்களில் காத்திருக்கிறோம், அதேப் போல தேவனுடைய சமூகத்தில் காத்திருக்கிறோமா? சிந்திக்க கடமைபட்டுள்ளோம், தேவனை நோக்கி காத்திருக்கும் அனுபவம் நமக்குள் உண்டா? வேலைக்காரர்கள் தங்கள் எஜமான் வருமளவும் காத்திருந்து பணிவிடைகளை செய்கின்றார்கள், அதேப்போல நாமும் தேவனுக்காக காத்திருக்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். யார் இந்த எஜமான்? நம்முடைய உலக இரட்சகரே அந்த எஜமான், அவரால் மட்டுமே நமக்கு வேண்டியதை அருளிச் செய்ய முடியும். அவருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி நம்மை ஒப்புக் கொடுக்கும் பொழுது அவர் நம்மை உயர்த்துகிறார்.

எவ்வாறு நமது கண்கள் எஜமானை நோக்க வேண்டும் என்பதை மூன்று குறிப்புகளில் உங்களிடம் பகிர விரும்புகிறேன்.

## 1. கிருபை கிடைக்கும்படி நோக்க வேண்டும்:-

நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி 6:8)

இந்த உலகத்தில் நாம் என்ன செய்கிறோம், மனித கரங்களை நோக்கிப் பார்கிறோம். அவர்களிடம் இருந்து கிருபை கிடைக்காதா? என்று ஏங்குகிறோம். மனிதர்களிடமிருந்து எப்பொழுதும் நமக்கு கிருபையோ இரக்கமோ கிடைப்பதில்லை. அவ்வாறாக கிடைத்தாலும் எதிர்பார்ப்புகளுடன் தான் கிடைக்கப்பெறுகிறது. இன்றைக்கு நாம் இதைச் செய்தால் நாளை நாம் வேறொன்றை பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக, திருமணத்திற்கு மொய் எழுதுவது போன்றதாகும். ஆனால், தேவனிடம் கிருபைக்காக நோக்கிப் பார்க்கும் போது தேவன் நமக்கு “நம் தேவைகளை உணர்ந்து பதிலளிப்பார்”.

யூதாவின் இராஜாவாகிய யோசபாத் கர்த்தருடைய வழியில் உத்தமமாய் நடக்கிறவராய் இருந்து பாகாலின் பலிபீடத்தை தகர்க்கவும், ஜனங்களுக்கு வேதத்தை போதிக்கவும் கட்டளையிட்டார், இக்காலத்தில் மோவாபியரும், அம்மோனியரும் யூதா தேசத்திற்கு விரோதமாக எழும்பிய போது யூதா தேசம் எங்கும் உபவாசத்தை கட்டளையிட்டார். தேவாலயத்திற்கு சென்று ஒரு பிரார்த்தனையை ஏறெடுக்கிறார். தேவனே எங்களை எதிர்த்து வரும் ஜனங்களோடு யுத்தம் செய்ய எங்களுக்கு பலனில்லை நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதும் எங்களுக்கு தெரியவில்லை என தேவனிடத்தில் முறையிடுகிறார். தேவன் அம்மோனிய படைகளை தங்களுக்குள்ளே போரிட்டு மடிய செய்கிறார். – 2 நாளா 20:1-30

நாமும் அவருடைய சமூகத்தில் கிருபைக்காக காத்திருக்கும் பொழுது தேவன் நமக்கு வெற்றியை சூட்டுகிறார்.

## 2. சம்பூரணமாய் கொடுக்கும்படிக்கு நோக்க வேண்டும்:-

"உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்"– யோபு 8:7

நம்முடைய தேவன் சகலத்தையும் சம்பூரணமாய் கொடுக்கிறவர் அதைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு எஜமானின் கைகளை நோக்கிப் பார்க்க வேண்டும். எப்போது நாம் சம்பூரணமாய் பெற்றுக் கொள்ள முடியும்? மத்தேயு 25-ஆம் அதிகாரத்தின்படி "உண்மையும் உத்தமமுமாய் நடந்து கொள்வதன்" மூலம் நம்மால் சம்பூரணமாய் பெற்றுக் கொள்ள முடியும். 5,2 தாலந்துகளை பெற்றவர்களை இரட்டத்தனையாய் ஆசீர்வதித்தார். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் - யாக். 1:5

யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற தேவனிடத்தில் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். சம்பூரணமானவைகளை பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ளவேண்டும்.

## 3. அன்பை கொடுக்கும்படி நோக்க வேண்டும்:-

உபாகமம் 7:13-ல் வாசிக்கிறபடி "உன் மேல் அன்பு வைத்து" என்பதின் மூலம் தொடர்ச்சியாக வருகின்றதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அவருடைய அன்புக்குரியவர்களாக நம்மை மாற்ற வேண்டும்.

இயேசுவுக்கு அன்பாயிருந்த ஒரு குடும்பம் மார்த்தாள், மரியாள், லாசரு குடும்பம். திடீரென்று லாசரு வியாதிப்பட்டு மரித்து போனார், மரித்த லாசருவை காண இயேசு வருகிறார், அங்கு இயேசு கண்ணீர் விட்டார் (யோவான் 11:35). இயேசு இன்றும் நமக்காக கண்ணீர் விட்டு கொண்டே இருக்கிறார். லாசருவின் கல்லறை அருகே நின்று அவர் மீது கொண்ட அன்பினால் கண்ணீர் விட்ட கிறிஸ்து இன்று நியாயத்தீர்ப்பு நாளில் நமக்கு ஏற்படுவதை நினைத்து கண்ணீர் விடுகிறார்.

ஆம், பிரியமானவர்களே நம்மை சீர் தூக்கிபார்க்க அழைக்கப்படுகிறோம்.

பரலோகத்தில் அவரோடு கூட சஞ்சரிக்க நாமும் ஆயத்தமாக உள்ளோமா?

எஜமானின் கரங்களை வேலைக்காரரின் கண்கள் நோக்குவதைப் போல நாமும் அவருடைய, கரத்திலிருந்து கிருபையையும், சம்பூரண வாழ்வையும், அவருடைய அன்பையும் பெற்றவர்களாக வாழ அழைக்கப்படுகிறோம்.

**திருமதி. Golden Irene Sheeja Robin Devadhas**

---

## துக்கம் பகிர்வோம்

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் திரு. பென்சாம் அவர்களின் தாயார் திருமதி. அன்னம்மாள் தவமணி அவர்கள் எப்ரல் மாதம் 22-ஆம் தேதி அன்று கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## பாடலின் பின்னணியம்

## என் மீட்பர் உயிரோடிருக்கையிலே

**பாடல் : ஞா. சாமுவேல்** **ராகம் : ஞா. சாமுவேல்**

**பல்லவி**

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே.

**சரணங்கள்**

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே, சுக பத்திர மருளும்,

2. பாவமோ, மரணமோ, நரகமோ, பேயோ
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்;
சஞ்சல மினியேன்? நெஞ்சமே மகிழாய்.

3. ஆசி செய்திடுவார், அருள்மிக வளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்ச வழி, சத்யம், வாசல், உயிரெனும்,

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்;
கடைசி மட்டுங் கைவிடாதிருப்பார்;
பவமன்னிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்,
பரம பதவியினுள் எந்தனை எடுப்பார்.

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்
பொல்லான் அம்புக ளெய்திடட்டும்
ஆனது ஆகட்டும், அருள்மழை பெய்திடும்
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள்,

அருள்திரு. ஞா. சாமுவேல் ஐயர் ஒரு சிறந்த வேத நிபுணர். தமிழ் மொழிப்பற்று மிக்கவர். அதுமட்டுமன்றி கர்நாடக இசையையும் முறைப்படி கற்றவர். இப்படிப்பட்ட சிறந்த மேதை எழுதிய பாடலே இப்பாடல்.

போதகர் சாமுவேல் தரங்கம்பாடி, மற்றும் பெங்களூர் இறையியல் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். தன் வாழ்க்கையில் சோதனைகள் பலவற்றை அனுபவித்தார். தொடர்ந்து வந்த துன்பங்களால் வேதனையுற்று, சோர்வு மேலிட, ஒரு நாள் மாலை மயங்கும் வேளையில் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் பாதையில் கிடந்த ஒரு சிறு காகிதத் துண்டைப் பார்த்து கையிலெடுத்தார். அதில் “என் மீட்பர் உயிரோடிருக்கிறார்” என்ற வேத வசனம் எழுதப்பட்டிருந்தது.

வேத அறிஞராகிய சாமுவேலின் மனக்கண்முன், யோபுவின் வாழ்க்கை திரைப்படம் போல ஓடியது. யோபு கடந்து வந்தப் பாடுகளை தான் அனுபவிக்கும் வேதனைகளோடு ஒப்பிட்டு பார்த்தார். அத்தனை பாடுகள் மத்தியிலும், மனந்தளராது, இவ்வசனத்தின் மூலம் சாட்சி பகர்ந்த விசுவாச வீரன் யோபுவின் சவால், சாமுவேலுக்கு புத்துணர்ச்சியையும், தெம்பையும் அளித்தது.

தனது வேதனைப் புலம்பல்களினின்று விடுபெற்ற போதகரின் உள்ளம், புதிய உற்சாகத்தால் நிறைந்தது. இவ்வசனம் அவர் உள்ளத்தில் தந்த நம்பிக்கையே இப்பாடலாக உருவெடுத்தது. தன் வாழ்க்கையின் சோர்வுகளை இப்பாடலைக் கொண்டு மேற்கொண்டு வெற்றி பெற்றார்.

கருத்து மிகுந்த இப்பாடல், இன்றும் சோர்ந்து போகும் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் பாடலாக விளங்குகிறது.

சாமுவேல் ஐயர் எழுதிய "குணப்படு பாவி" என்ற மற்றொரு கீர்த்தனை, திருச்சபை வழிபாட்டில் பாவ அறிக்கைக்கு வழிநடத்தும் பாடலாக உபயோகிக்கப்படுகிறது.

**பாடகர் குழு-CSI Tamil Church – Oman (நன்றி:கிறிஸ்து சபைகீர்த்தனை ராகங்கள்)**

## மே மாத வேதபாடங்கள் வாசிப்பவர்கள் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| 03-05-2019 | 2 நாளாகமம் 34:29-33 | Mrs. Nisha Broosewelt |
| | லூக்கா 24:13-27 | Mr. Vinobha |
| 10-05-2019 | எரேமியா 9:1-10 | Miss. Jeena Jones |
| | யோவான் 20:19-23 | Mr. Alex Baskar |
| 17-05-2019 | 2 நாளாகமம்7:13-22 | Deacon |
| | மத்தேயு 13:53-58 | Deacon |
| 24-05-2019 | 2 இராஜாக்கள் 2:9-16 | Mrs. Nisha Rajan |
| | மத்தேயு 28:16-20 | Mr. Anandharaj |
| 31-05-2019 | யாத்திராகமம்36:1-7 | Mrs. Paulin Shabila |
| | யோவான் 14:25-31 | Mr. Arun Paul |
| 07-06-2019 | …………….. | Mrs. Percy Jean |
| | …………….. | Mr. Austin Daniel raj |

## ஆண்கள் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி - 60

## 2019 - மே மாத கேள்விகள்

## (2 இராஜாக்கள் 18 முதல் 1 நாளாகமம் 2 வரை)

1. யூதாவிலுள்ள சகல அரணான பட்டணங்களை பிடித்த ஆசீரியாராஜா யார்?
2. ரப்சாக்கே எந்த பாஷையில் பேசினான்?
3. நிருபத்தை வாசித்த எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக விரித்து என்ன செய்தான்?
4. சங்கரிப்பு ஆசீரியரின் பாளையத்தில் எப்போது நடைபெற்றது?
5. எசேக்கியாவின் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் பார்த்தவர்கள் யார்?
6. ஆகாசின் சூரிய கடியார சாயை பத்து பாகை பின்னிட்டுபோனது எப்போது?
7. மனாசேயின் மனைவி பெயர் என்ன?
8. யூதாவை மனாசே எதினால் பாவம் செய்ய பண்ணினான்?
9. யோசியா அரசனின் ஊழியக்காரன் யார்?
10. கர்த்தரின் ஆலயத்தில் கண்டுபிடிக்கப் பட்ட நியாயப்பிரமாண புத்தகம் யாரிடத்தில் கொடுக்கப்பட்டது?
11. யோவகாசை இராஜாவாக அபிஷேகம் பண்ணினது யார்?
12. யோயாக்கீமின் தந்தை பெயர் என்ன?
13. பாபிலோனில் ராஜாவுக்கு எதிராக கலகம் பண்ணினது யார்?
14. பாபிலோனிய ராஜாவால் சிறைபிடிக்கப்பட்ட பராக்கிரமசாலிகள் எத்தனைபேர்?
15. நேபுகாத்நேச்சார் யூதேயா தேசத்தில் மீதியாக வைத்த ஜனத்தின்மேல் யாரை அதிகாரியாக வைத்தான்?
16. பாபிலோன் ராஜாவின் காவல் சேனாபதி யார்?
17. மீதியானியரை மோவாபின் நாட்டில் முறிய அடித்தவன் யார்?
18. யாருடைய நாட்களில் பூமிபகுக்கப்பட்டது?
19. அபிசூருடைய மனைவி பெயர்?
20. சேசானின் வேலைக்காரன் யார்?

## 2019 - ஏப்ரல் மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

### (2 இராஜாக்கள் 8 முதல் 2 இராஜாக்கள் 17 வரை)

1. தமஸ்கு - 2 இராஜாக்கள் 8:7-9
2. கீலேயாத் - 2 இராஜாக்கள் 8:28
3. ஒலிமுக வாசலில் - 2 இராஜாக்கள் 9:31,32
4. யெஸ்ரயேலில் - 2 இராஜாக்கள் 9:16
5. சேவகரும் சேர்வைக்காரரும் - 2 இராஜாக்கள் 10:25
6. சமாரியா போகும் வழியில் - 2 இராஜாக்கள் 10:12
7. பட்டயம் - 2 இராஜாக்கள் 11:20
8. ஆசாரியனாகிய யோய்தா - 2 இராஜாக்கள் 11:12
9. ஆசாரியரை - 2 இராஜாக்கள் 12:16
10. ஆசகேலை - 2 இராஜாக்கள் 12:17
11. யோவகாஸ் - 2 இராஜாக்கள் 13:4
12. இஸ்ரவேல் - 2 இராஜாக்கள் 13:22,23
13. அசரியா - 2 இராஜாக்கள் 14:21,22
14. உப்பு பள்ளத்தாக்கிலே - 2 இராஜாக்கள் 14:7

15. பெத்மாக்கா - 2 இராஜாக்கள் 15:29
16. பெக்காகியாவின் - 2 இராஜாக்கள் 15:23-25
17. ஆலயத்தின் அருகே - 2 இராஜாக்கள் 16:18
18. திகிலாத்பிலேசர் - 2 இராஜாக்கள் 16:7,9
19. இஸ்ரவேல் - 2 இராஜாக்கள்17:34
20. இஸ்ரவேல் - 2 இராஜாக்கள் 17:8,12

## மகளிர் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி – 74

## 2019 - மே மாத கேள்விகள்

## (யோபு 35 முதல் சங்கீதம் 2 வரை)

1. தேவன் எதற்கு செவிகொடார்?
2. வல்லவருடைய புயத்தினிமித்தம் அலறுகிறவர்கள் யார்?
3. சிறுமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறவர் யார்?
4. ஆராய்ந்து முடியாதது எது?
5. மகாநீதிபரர் யார்?
6. வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போலிருப்பது எது?
7. புருஷனைப்போல் இடைகட்டிகொள் யார் யாரிடம் கூறியது?
8. முறிக்கப்படுவது எது?
9. அரணான ஸ்தலத்தில் தங்கி வாசம் பண்ணுவது எது?
10. தேவன் எதற்கு ஞானத்தை விலக்கி வைத்தார்?
11. எது மாட்டைப்போல் புல்லை தின்னும்?
12. நதி புரண்டு வந்தாலும் பயந்தோடாதது ஏது?
13. எது தும்மும் போது ஒளிவீசும்?
14. அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜா யார்?
15. சகலத்தையும் செய்ய வல்லவர் யார்?
16. யோபுவின் சிறையிருப்பை கர்த்தர் எப்போது மாற்றினார்?
17. யாருடைய வழி அழியும்?
18. யார் செய்வதெல்லாம் வாய்க்கும்?
19. கர்த்தரை எப்படி சேவிக்க வேண்டும்?
20. கர்த்தருடைய பரிசுத்த பர்வதம் எனப்படுவது எது?

## 2018 - ஏப்ரல் மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

### (யோபு25 முதல் 35வரை)

21. தேவன்–யோபு25:4
22. பூமி – யோபு 26:7
23. பொல்லாத கொடூரகார மனுஷரின் கர்ப்ப பிறப்புகள் – யோபு 27:13
24. மாயக்காரன் – யோபு 27:8
25. ஆண்டவருக்குப் பயப்படுவரே – யோபு 28:28
26. ஞானத்தின் விலை – யோபு 28:18
27. யோபு – யோபு 29:18

8. தேவன் – யோபு 29:3
9. யோபுவை பரியாசம் பண்ணினவர்களுடைய பிதாக்களை – யோபு 30:1-7
10. வாலிபர் – யோபு 30:12
11. யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி அயலானுடைய வாசலை எட்டிப்பார்ப்பது – யோபு 31:9-11
12. ஆதாம் – யோபு 31:33
13. உண்டாக்கினவரால் சீக்கிரமாய் எடுத்து கொள்ளபடுவர் – யோபு 32:22
14. பரகெயேலின் குமாரன் - பூசியன் – யோபு 32:6
15. தேவன் – யோபு 33:14-18, 29
16. ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசி பண்ணுகிற தூதனானவர் – யோபு 33:23
17. அக்கிரமம் – யோபு 34:10
18. எலிகூ – யோபு 34:1-35
19. மனுஷனுக்கு – யோபு 35:8
20. வீண் வார்த்தைகளுக்கு – யோபு 35:13

**2019 ஏப்ரல் மாத திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Basker | Mrs. Priyadharsini Kanagavel |
| Mrs. Eben Silviya Ennesar | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Golden Irene Sheeja | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Gracelin Melba | Mrs. Sarah Raja Singh |
| Mrs. Jancy Victor Johnslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. JayaVictor | Mrs. Sapthekha Jerry |
| Mrs. Juslin Jaslin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Leela Gladson | Mrs. Shiney Johan |
| Mrs. Manju Martin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Nisha Rajan | |

**2019 ஏப்ரல் மாத திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mr. Anu | Mr. MohanBabu |
| Mr. Alex Baskar | Mr. Ramesh |
| Mr. Bejo Nelson | Mr. Robin Devadhas |
| Mr. David Prabhakaran | Mr. J.P. Prince |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. V.N.Rajan |
| Mr. Johan Pratheep | Mr. Selvamani |
| Mr. Jean C.R. Shibin | Mr. Sylus |
| Mr. Kanagavel | Mr. Vinolin |

## ஏப்ரல் மாத ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவரின் மட்டில்லாத கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 11-4-2019 அன்று இரவு 9 மணிக்கு சங்க செயலர் திரு சைலஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது சங்க உறுப்பினர்கள் ஆவிக்குரிய பாடல்களை பாடி ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன் பின்னர் யோவான் 10:1-18 வரை வாசிக்கப்பட்டது திரு. இராபின் தேவதாஸ் அவர்கள் அன்பை வெளிப்படுத்தும் நல்லமேய்பன் என்ற தலைப்பின் ஆண்டவருடைய செய்தியை வழங்கினார்கள்.

1. நானே நல்ல மேய்பன்
2. ஆபிரகாமே என பெயர் சொல்லி அழைத்த ஆண்டவர்
3. ஆடுகளுக்காக ஜீவனை கொடுக்கும் நல்ல மேய்பன்

இந்த மூன்று காரியங்களை குறித்து அருமையாக விளக்கினார்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

சாட்சி வேளையில் அனேகர் சாட்சி கூறினார்கள் ஜெபகுறிப்புக்களை சொன்ன சகோதரர்களுக்காவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு சபைக்காகவும் தேசத்திற்காகவும் குடும்பங்களுக்காகவும் நோய்வாய்பட்டவருக்காகவும் திக்கற்றவர்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்கப்பட்டது. 11-மணியளவில் கூட்டம் நிறைவுபெற்றது கலந்து கொண்ட விசுவாசிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக. கூடுகையை தாங்கிய திரு. கனகவேல், திரு. விஜயராஜ் மற்றும் உணவு வழங்கிய திரு. V.N. ராஜன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பிற்குரிய விசுவாசிகளே! திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**இவன்,**
**ஆண்கள் சங்க செயலர்,**
**திரு. M. சைலஸ்.**

## ஏப்ரல் மாத பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை

இயேகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஏப்ரல் மாத பெண்கள் சங்க கூடுகை ஏப்ரல் மாதம் 11-ம் தேதி PCO Annex ஹாலில் வைத்து இரவு 9 மணியளவில் திருமதி. சாரா ராஜாசிங் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் சங்கத்தார் ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனைத் துதித்தனர்.

அதன்பின் திருமறைப்பாடமாக கலாத்தியர் 5:13-26 வசனங்கள் வாசிக்கப்பட்டது. பின்னர் திருமதி. ரெஜின் ஜஸ்டா வினோலின் அவர்கள் “கனிகள் மற்றும் பலன்கள்” என்ற தலைப்பில் கீழ்கண்ட குறிப்புகளில் செய்தி அளித்தார்கள்.

1. நல்ல மரம், கெட்ட மரம் அவற்றை ஆவியின் கிரியைகள், மாம்ச கிரியைகளோடு ஒப்பிட்டு
2. நல்ல மரத்தின் கனிகளாகிய ஆவியின் கனிகள்
3. களை பிடுங்குதலாகிய இயேசுவின் இரணடாம் வருகை இவற்றை எடுத்துக்காட்டுகளோடு, வேத வசனங்களைக் கொண்டு விவரித்து கூறினார்கள். தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் திருமதி. ஜெயாவிக்டர் அவர்கள் ஜெபக்குறிப்புகளை பகிர்ந்து கொள்ள அந்த குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதன் பின்பு சாட்சிவேளையில் பலர் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தும் ஜெபக்குறிப்புகளையும் பகிர்ந்து கொண்டார்கள். திருமதி. ஷைனி ஜோகன் சாட்சி சொன்னவர்களுக்காகவும், ஜெபக்குறிப்பு சொன்னவர்களுக்காகவும்,sponsorசெய்தவர்களுக்காகவும் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்காகவும் ஜெபம் ஏறெடுத்தார்கள். பெண்கள் சங்கமானது 11:10 மணிக்கு இனிதே நிறைவுபெற்றது. இறுதியில் sponsorசெய்த திருமதி. ராணி பென்சாம் மற்றும் திருமதி. சாரா ராஜாசிங் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்.**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்.**

---

## உழைப்பும் ஆசீர்வாதமும்

உழைப்பாளியின் உயர்வையும்
உழைப்பின் உன்னதத்தையும்
உணர்த்தும் ஒரு நாள்
மேதினத் திருநாள்.

உடலும் உள்ளமும் இரும்பானால்
துவண்டுபோய் துருப்பிடிக்கவிடாதே
திடமான உழைப்பினால்
மலை கூட துரும்பாகுமே.

உழைப்பால் உயர்ந்த வெற்றிகாண
மறவா கனவு காணுங்கள்
கடினமாய் உழைத்து கரையேற
கர்த்தரின் கரம் பற்றுங்கள்

சோர்வெனும் அம்புகள் பிசாசின் ஆயுதங்கள்
சோர்வின்றி உழைத்தால் பிதாவின் ஆசீர்வாதங்கள்.

**- திருமதி.மகிழா ஜெங்கின்ராஜ்**

## Birthday Celebrants – May 2019

| | |
|---|---|
| 02nd May | Mr. Atheesh |
| 03rd May | Master. Jaydon Immanuel, S/o Mr. Ramesh |
| 03rd May | Master. Rishan Robin Garwin, S/o Mr. C.D. Robin Raj |
| 03rd May | Mr. C.J. Bravin |
| 05th May | Mr. Jegan Broose |
| 05th May | Mr. H. Jaya raj |
| 07th May | Miss. Eunice Drusilla, D/o Mr. Robin Devadhas |
| 08th May | Mr. Arun Nickson, S/o Mr. Nelson |
| 09th May | Mr. Bejo Nelson |
| 09th May | Master. J. Jesien Manoj, S/o Mr. Justus Martin |
| 10th May | Mr. Rabi |
| 10th May | Mrs. Gracelin Melba, W/o Mr. Sujin |
| 10th May | Mrs. Rabboni Robin, W/o Mr. C.D. Robinraj |
| 11th May | Mrs. Sumathi, W/o Mr. Jones |
| 11th May | Miss. D. Joyce Davina, D/o Mr. Dhinakaran |
| 11th May | Mrs. Menaga, W/o Mr. David Prabhakaran |
| 12th May | Mr. Moorthy |
| 12th May | Mrs. Virgin Jegatha, W/o Mr. Jino John |
| 13th May | Mr. J. Gnanadhas |
| 17th May | Mr. David Sunder Singh |
| 17th May | Mr. Arul Dhas |
| 17th May | Mr. C. Stalin |
| 18th May | Master. Dani J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 18th May | Mr. Johnson Raj |
| 18th May | Mrs. Susamma |
| 19th May | Mr. Vineeth |
| 20th May | Mrs. Kala, W/o Mr. Jegan Broose |
| 20th May | Mrs. Synthia, W/o Mr. Srinivas |
| 20th May | Mr. Jaslin Sundara Kumar |
| 21st May | Mr. C. Immanuel Prince |
| 21st May | Master. S. Dino, S/o Mr.C. Sujin |
| 22nd May | Mrs. Sangeeth Johns, W/o Mr. S. Augustin |
| 25th May | Mrs. Jaya Rani, W/o Mr. Victor |
| 27th May | Mr. G. Jebastin |
| 29th May | Mr. Sujith Gladson |
| 31st May | Master. D. Janith Charan, S/o Mr. David Prabhakaran |
| 31st May | Mr. I. Simson |

## Wedding Day Anniversaries – May 2019

| | |
|---|---|
| 01st May | Mr. Ramji & Mrs. Sterbie |
| 01st May | Mr. Victor Johnslin& Mrs. Jancy Deepa |
| 04th May | Mr. Ashok & Mrs. Angel Ashok |
| 05th May | Mr. A. Kannan& Mrs. Vency Deepa |
| 05th May | Mr. T.N. Brejin & Mrs. Rupa |
| 06th May | Mr. Jean C. R. Shibin& Mrs. Percy |
| 07th May | Mr. Alex Baskar & Mrs. Boopathi |
| 10th May | Mr. Kanagavel& Mrs. Priyadharsini |
| 10th May | Mr. T. Bensam& Mrs. Gracelin Rani |
| 10th May | Mr. Sujin Issac Samuel& Mrs. Deena |
| 12th May | Mr. G. Victor Thaya Sing& Mrs. Jaya |
| 14th May | Mr. Ennesar Jesu Paul& Mrs. Ebensilviya |
| 16th May | Mr. J. Vinolin Vetha Kumar & Mrs. Regin Justa |
| 16th May | Mr. Selvamani& Mrs. Vimala |
| 20th May | Mr. Kingsly& Mrs. Mary Suja |
| 25th May | Mr. Jegan Broose& Mrs. Kala |
| 25th May | Mr. A. Rex Macedo& Mrs. Geetha |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-05-2019 | புதன் - அருணோதய ஆராதனை |
| | இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 |
| 02-05-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் /நேரம்: இரவு 9:00 – 11:00 |
| 03-05-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் /நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 10-05-2019 | வெள்ளி ஆராதனை |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் /நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 11-05-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம் |
| | இடம் : மார்த்தோமா ஹால் /காலை 10:30 – 1:00 |

| | | |
|---|---|---|
| 16-05-2019 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை | |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 | |
| 16-05-2019 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை | |
| | இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 | |
| 17-05-2019 | வெள்ளி– 15வது சபைநாள் விழா சிறப்பு ஆராதனை | |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 | |
| 24-05-2019 | வெள்ளி– போதகரின் பிரிவு உபசார ஆராதனை | |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 | |
| 31-05-2019 | வெள்ளி ஆராதனை | |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 | |
| 01-06-2019 | சனி - அருணோதய ஆராதனை | |
| | இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 | |
| 06-06-2019 | வியாழன்– இரவு ஜெபக்கூடுகை | |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 | |

## ஜெபிக்க சில குறிப்புகள்

**திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நம் போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- புதிய போதகருக்காகவும் அவருடைய விசா காரியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகா் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- இந்த மாதம் 17-ம் தேதி நடைபெறும் இருக்கும் நம் 15-ம் ஆண்டு சபை நாள் விழா சிறப்பாக நடைபெறவும் ஜெபிப்போம்
- சபையின் நிர்வாககுழு தெய்வபயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிட ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சிகாண ஜெபிப்போம்.

- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப்பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், போதகர் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள பல திருச்சபைகள் BJP, RSS-னால் தாக்கப்பட்டு வருகிறது. தமிழகத்திலும் இந்த நிலை பெருகி வருகிறது. இறைமக்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம். துன்புறுத்துவோர் சந்திக்கப்பட மன்றாடுவோம்.

**திருப்பணிகளுக்கான மன்றாட்டு குறிப்புகள்:-**

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள்தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- பணிக்களங்களில் அற்புத அடையாளங்கள் நிகழவும், அநேக புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், புதிய புதிய திருச்சபைகள் பெருகவும் ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மதவெறியர்களுக்காகவும் அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்துக்காக ஜெபிக்க:-**

- நமது இந்திய நாட்டுக்காகவும், ஆளுகை செய்கிறவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- சிறுபான்மையினர் (இந்துக்களல்லாதவர்கள்) நசுக்கப்படுகிற நிலைமாற ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் கர்த்தரே தெய்வம் என்பதை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.
- ஓமான் தேசத்துக்காகவும், ஆளுகை செய்கிற தலைவர்களுக்காகவும், இங்கு இறைமக்கள் ஆண்டவரை மகிமைப்படுத்த தொடர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகவும் ஜெபிப்போம்.
- தீவிரவாதிகளால் உலகெங்கிலும் பதற்றம் ஏற்படுகிறது. இந்த நிலை மாற ஜெபிப்போம்.

- உலக நாடுகளுக்காகவும், உலக திருச்சபைகளுக்காகவும் ஜெபிப்போம். போர், வறுமை, தீவிரவாதம், இயற்கை பேரழிவு இவற்றினால் துயரப்படும் மக்கள் உள்ள எல்லா நாடுகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்துலக்காக பாரத்தோடு ஜெபிப்போம். சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக, சுவிசேஷத்திற்கு தடை செய்யாத, மதவாதம் மற்றும் இனவாதத்தால் நாட்டின் மக்களை பிரித்தாளாத நல்ல அரசு அமைந்திடவும், அனைத்து மக்களும் பணத்திற்காக வாக்குகளை செலுத்திடாமல் சுயமாக சிந்தித்து தங்கள் வாக்குகளை செலுத்தவும் அனைவரும் பாரத்தோடு ஜெபிப்போம்.

**இலங்கை தேசத்தில் தேவாலயங்களில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலில் அனேகர் மரித்துபோயினர். அந்த துயர சம்பவத்திற்காகவும்,காயப்பட்டோரின் துரித விடுதலைக்காகவும், மரணமடைந்தவர்களின் குடும்ப ஆறுதலுக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.**

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலைகளில் பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்றநாளில் நல்ல விடுதலைப்பெறவும் ஜெபிப்போம்.

## NEW ARRIVALS



**"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"**

**Boy Baby**

**S/o Mr. Atheesh & Mrs.C.R. Nithya**

**26th April 2019**

| | | | | |
|---|---|---|---|---|
| மே 5 | ஞாயிறு | சங்கீதம் 138:1-8 | சங்கீதம் 138:3 | 2 நாளாகமம் 5-7 |
| மே 6 | திங்கள் | எபேசியர் 3:1-12 | எபேசியர் 3:12 | 2 நாளாகமம் 8-11 |
| மே 7 | செவ்வாய் | பிலிப்பியர் 1:12-30 | பிலிப்பியர் 1:20 | 2 நாளாகமம் 12-16 |
| மே 8 | புதன் | 1 தெச 2:1-20 | 1 தெச 2:2 | 2 நாளாகமம் 17-19 |
| மே 9 | வியாழன் | 1 தீமோத் 3:1-16 | 1 தீமோத் 3:13 | 2 நாளாகமம் 20-22 |
| மே 10 | வெள்ளி | எபிரெயர் 10:19-39 | எபிரெயர் 10:20 | 2 நாளாகமம் 23-25 |
| மே 11 | சனி | 2 பேதுரு 1:1-21 | 2பேதுரு 1:5,6,7 | 2 நாளாகமம் 26-29 |
| மே 12 | ஞாயிறு | நீதி 16:1-20 | நீதி 16:1-19 | 2 நாளாகமம் 30-32 |
| மே 13 | திங்கள் | நீதி 29:12-27 | நீதி 29:23 | 2 நாளாகமம் 33-34 |
| மே 14 | செவ்வாய் | செப் 2:1-15 | செப் 2:3 | 2 நாளாகமம் 35-36 |
| மே 15 | புதன் | மத்தேயு 11:16-30 | மத்தேயு 11:29 | எஸ்றா 1-4 |
| மே 16 | வியாழன் | 1 பேதுரு 5:1-14 | 1 பேதுரு 5:5 | எஸ்றா 5-7 |
| மே 17 | வெள்ளி | அப் 20:13-38 | அப் 20:19 | எஸ்றா 8-10 |
| மே 18 | சனி | நீதி 18:1-24 | நீதி 18:12 | நெகேமியா 1-4 |
| மே 19 | ஞாயிறு | யாக்கோபு 4:1-17 | யாக்கோபு 4:10 | நெகேமியா 5-7 |
| மே 20 | திங்கள் | லூக்கா 14:1-24 | லூக்கா 14:11 | நெகேமியா 8-10 |
| மே 21 | செவ்வாய் | 2 இராஜா 22:1-20 | 2இராஜா 22:19 | நெகேமியா 11-13 |
| மே 22 | புதன் | 2 நாளா 7:1-22 | 2 நாளா 7:14 | எஸ்தர் 1-4 |
| மே 23 | வியாழன் | நீதி 22:1-29 | நீதி 22:4 | எஸ்தர் 5-10 |
| மே 24 | வெள்ளி | மத்தேயு 18:1-17 | மத்தேயு 18:4 | யோபு 1-4 |
| மே 25 | சனி | நீதி 11:1-13 | நீதி 11:2 | யோபு 5-8 |
| மே 26 | ஞாயிறு | ஏசாயா 48:1-22 | ஏசாயா 48:17 | யோபு 9-12 |
| மே 27 | திங்கள் | சங்கீதம் 25:1-22 | சங்கீதம் 25:4 | யோபு 13-17 |
| மே 28 | செவ்வாய் | யோபு 36:1-33 | யோபு 36:22 | யோபு 18-21 |
| மே 29 | புதன் | 1 கொரி 2:1-16 | 1 கொரி 2:13 | யோபு 22-26 |
| மே 30 | வியாழன் | 1 சாமு 12:1-25 | 1 சாமு 12:23 | யோபு 27-30 |
| மே 31 | வெள்ளி | சங்கீதம் 27:1-14 | சங்கீதம் 27:11 | யோபு 31-34 |
| ஜுன் 1 | சனி | நீதி 4:1-27 | நீதி 4:11 | யோபு 35-38 |
| ஜுன் 2 | ஞாயிறு | நீதி 1:1-33 | நீதி 1:8 | யோபு 39-42 |
| ஜுன் 3 | திங்கள் | ரோமர் 15:1-21 | ரோமர் 15:4 | சங்கீதம் 1-7 |
| ஜுன் 4 | செவ்வாய் | 1 தீமோ 4:1-16 | 1 தீமோ 4:6 | சங்கீதம் 8-14 |
| ஜுன் 5 | புதன் | எபிரெயர் 13:18-16 | எபிரெயர் 13:9 | சங்கீதம் 15-18 |
| ஜுன் 6 | வியாழன் | நீதி 13:1-25 | நீதி 13:14 | சங்கீதம் 19-24 |
| ஜுன் 7 | வெள்ளி | நீதி 19:1-29 | நீதி 19:27 | சங்கீதம் 25-30 |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30– 1:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. K. Gladston**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail :pastor@csitamilchurchoman.org**
**Website: www.csitamilchurchoman.org**